www.tamilarangam.net

# நாங்கள்




GUYS மாணவர் இளைஞர் பொதுமன்றம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓ . . . . புரூட்டஸ் !

ஓ' என் இறந்தகால
இனிய நண்பனே
நீ ஆயுதம் ஏந்தியிருப்பது
எதற்காக?
எனக்குப் புரியவில்லை
நான் நினைக்கிறேன்
அது
உனக்கும்தான் புரியவில்லை?
அதிகார வெறியரை
அடக்குவதற்காக
-எனத்தான்
நீ
அடிக்கடி சொல்கிறாய்
நானோ
அங்கும் இங்குமாக
அடி மண்ணில் புதையுண்ட
இறந்தகால நண்பர்களின்
முதுகில்
உன் துப்பாக்கி உமிழ்ந்த
துரோகத்தைப் பார்க்கிறேன்
எங்கள் கடற்கரையோர
தென்னந் தோப்புகளில்
சிதைந்திருந்த—
சில தோழியர் உடல்களின்
முதுகுப் புறங்களில்
உன் ஆயுதம் அளித்த
இரும்புத் துண்டங்களில்
அவர்கள் வயிற்றில்
முளைத்து—
முளையிலே மடிந்த
உன்சதை உணர்வின்
சிதைவுகளில்
நீ பேசிய
பெண்விடுதலை பற்றிய
பிரதிபலிப்பை பார்க்கிறேன்
இங்கு நடக்கும்
**மானிட மறைவுகளின்**
**மறைவில்**
உண்மை—
ஆயுதத்தின் நிழலை
அறிகிறேன்
எனக்குத் தெரியும்
வெறுமையான—
உன் தத்துவப் புத்தகத்திற்கும்
சிவப்பு உறைபோட்டிருப்பது...
உன் திறமையே?
இல்லை
அது உன் சிரசின் வெறுமை
உனியாவது
மானிடம் உணரும்
தத்துவத்தை தவற விட்ட
உன் துப்பாக்கி
எம்மினத்தின் துர்ப்பாக்கியம்
என்பதை அறிந்துகொள்
'ஓ' புரூட்டஸ்
இனியும்
உன் கை ஆயுதம்
எதற்காக?




அடிப்படை உரிமைகள் ஒவ்வொன்றும் மறுக்கப்பட்ட நிலையில் உயிருக்கு உத்தரவாதமின்றி வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களின் நிலை பற்றி பாடசாலை மாணவர்கள் என்ன கருதுகின்றார்கள் என அறிய ''நாங்கள்'' அவா கொண்டது. இதன் விளைவே ''நாங்கள்'' சில கேள்விகளை மாணவர் மத்தியில் விடுத்ததன் மூலம் அவர்கள் அளித்த பதிலைத் தொகுத்து சாராம்சத்தை இங்கு சொல்கிறோம்.

தமிழ் பேசும் மக்களின் இன்றைய பிரச்சினையும் அதற்கான தீர்வும், சிறிலங்கா அரசு இப்பிரச்சனையை எவ்வாறு அணுகுகின்றது: மாணவர் இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு ஆயுதப் போராட்டத்தில் இறங்குவதா, இயக்கங்கள் நடத்தும் போராட்டங்களும் நடவடிக்கைகளும் பற்றிய அபிப்பிராயங்கள் போன்ற கேள்விகள் மாணவர்களிடம் கேட்கப்பட்டன.

இனியும் பொறுத்திருக்க முடியாது. இதற்கான தீர்வுகள் உடனடியாக பெறப்பட வேண்டும் எனவும் இந்தத் தீர்வுகள் பெறப்படுவதற்கு 'விடுதலை' என்பதனை முன் வைத்த இவர்கள் விடுதலையில் கூடிய அக்கறை செலுத்தியவர்களாகக் காணப்பட்டார்கள். இராணுவத்தின் அகோரத்தனமான கொலை வெறி, நண்பர்கள், உறவினர்கள், சுற்றத்தார்கள் போன்றோரின் இழப்புக்களே இவர்களை விடுதலை பற்றி சிந்திக்க செய்துள்ளது.

பெரும்பாலான மாணவர்கள் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை கொள்ள சில புறச்சூழ்நிலைகளே காரணமாய் அமைந்துள்ளன. ஆயினும் பிளவுபட்ட நிலையில் இயக்கங்களின் செயற்பாடுகளை இவர்கள் முற்றாக நிராகரித்துள்ளனர். முக்கியமாக எதிரி யார்? நண்பன் யார்? என்ற விடயத்தில் விடுதலை இயக்கங்கள் தெளிவற்றிருப்பதாக இவர்கள் சுட்டிக்காட்டினர். மேலும் தாக்குதலுக்கான பிரதேசங்கள், தாக்குதல்கள் என்பவற்றை தெரிவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்வதில் விடுதலை இயக்கங்கள் எழுந்தமானமாக இயங்கி வருவதாகச் சுட்டிக் காட்டினர். இதன் பலாபலன்களாக ஆயிரக் கணக்கான எம்மவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன எனவும் கருத்துக்கள் வெளியிட்டனர்.

இயக்கங்களின் நடவடிக்கைகளுள் வங்கிக் கொள்ளைகள், சங்கக் கொள்ளைகள், அப்பாவிகளை பணயம் வைத்தல், கோவில் களைச் சூறையாடுதல், நிர்வாகத்தைச் சீர்குலைத்தல் போன்றவை தவறான நடை முறைகள் என்பதை மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டினர்.

பாடசாலைப் பகிஸ்கரிப்புகள் எந்த நோக்கத்திற்காக செய்யப்படல் வேண்டும் என்பதில் விடுதலை இயக்கங்கள் தெளிவற்றிருப்பதாக இந்த விடயத்தில் தெளிவுற்றிருந்த சில மழலைகள் தமது கருத்தை வெளியிட்டனர். அதே சமயம் தமது பாட நேரங்களில் அடிக்கடி குழப்பும் வகையில் பலாத்காரமாக நடாத்தப்படும் அரசியல் வகுப்பின் மூலம் தமது கல்வி பாதிப்படைவது பற்றியும் விளக்கியிருந்தனர். தொடர்ந்து இவ் அரசியல் வகுப்பை ஆயுதத்துடன் நடத்துபவர்கள் பற்றி பெரும் குறை கூறியிருந்தனர்.

முக்கியமாக ஈழம், ஈழ எல்லை, இவற்றினூடான பிரதிபலிப்புகள் பற்றி பெருமளவு தெளிவான நிலையினை பல இயக்கங்கள் ஏற்படுத்துவதில்லை எனவும், எதிர் காலத்தில் முட்டாள் சமூகத்தை உருவாக்கும் வகையில் ஆட்பிடித்தல் நடவடிக்கைகளில் இயக்கங்கள் இயங்கி வருவதாகவும் தமது உள்ளக் கிடக்கைகளை வெளியிட்டிருந்தனர்.

இம் மழலைகளது வெளிப்பாடுகள் மூலம் "நாங்கள்" சில அடிப்படை உண்மைகளைச் சொல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

எமது எதிர்காலச் செல்வங்களை வளமுடைய அறிவாளிகளாக உருவாக்க வழி விடுவது உங்கள் கடமை என்பதனை மறந்து விடாதீர்கள். அரசியல் தெளிவற்றநிலையிலான போராளிகளை உருவாக்க வழி சமைக்காதீர்கள். தலைமை ஒன்றை மாத்திரம் நினைவில் நிறுத்தி பொது நோக்கான "ஈழம்" என்பதனை மறந்து பிரிந்து நின்று செயற்படும் உங்கள் நிலையினை மாற்றி உண்மையான விடுதலைக்கு வழி கோலுங்கள்.



# இன்றைய சூழலும் 'நாங்களும்'

ஒரு புரட்சியில் மாணவர் சமூகம் வகிக்கக்கூடிய பாத்திரம் என்ன? அல்லது ஒரு சமூகத்தின் புரட்சிகர கால கட்டத்தில் மாணவர்கள் என்ன பங்கை ஆற்றவேண்டும்? என்ற வாறு கேள்விகளை எழுப்பி பரநத ஒரு களததில் இப் பிரச்சனையை அலசுவது சிக்கலும் சிரமமானதுமாகும். ஆகவே ஈழத்தில் தமிழ் பேசும் மாணவர் மத்தியில் எழுந்த மாணவர் அமைப்புகளின் வரலாற்றினூடாகவும் இன்று தோன்றியிருக்கும் பல மாணவர் அமைப்புகளின் தன்மைகளை புரிவதனூடாகவும், எதிர்காலத்தில் மாணவர் ஆற்றக்கூடிய காத்திரமான பங்களிப்பைக் குறித்துக் கவனிக்கலாம்.

முதலாவதாக, 1970-களில் "தரப்படுத்தல்" திட்டம் தாண்டவமாடத் தொடங்கியதும மாணவர்களிடமிருந்துஎதிர்ப்பு வெளியிடப்பட்டது. இவ் எதிர்ப்பு உணர்வினுக்கு "தமிழ் மாணவர் பேரவை" செயல் வடிவம் கொடுத்தது. அப்போது பல்கலைக்கழக மாணவர்களாக இருந்த பொன். சத்திய சீலன், சபாலிங்கம் போன்றோர் தலைமை தாங்கி 'முன்னெடுக்க மாபெரும் ஆர்ப்பாட்டம், ஊர்வலம் நடத்தி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், அப்போதைய கல்விப் பிரதியமைச்சர் சோம வீர சந்திரசிறியினது காருக்கு வெடிகுண்டு பொருத்தியதையும் சரித்திரத்தின் பக்கங்களில் காண முடியும். இவ்வாறாகத் தோற்றம் பெற்ற "மாணவர் அமைப்பு" அதற்கே யுரித்தான துடிப்பான செயற்பாடுகளை ஆரம்பத்தில் காட்டியது. ஆனால் அடக்குமுறை அதிகரிக்க முன்னோடிகள் பலரும் சிறைப்படுத்தப் பட அமைப்பு துண்டு துண்டாக சிதறியது. முன்னோடிகள் பலரும் கூட காலத்தால் நிலைக்க முடியாமல் இன்று அரசியலில் அனாதைகளாகப் போனதோடு தஞ்சம் கோரும் அகதிகளாயும் மாறிவிட்டனர். அடுத்த கட்டமாக எழுபதுகளின் உயர் கல்விக்காக லண்டன் சென்ற மாணவர்கள் மத்தியில் இருந்து ஈழ மாணவர் பொதுமன்றம் [GUES] 1976ல் தோற்றம் பெற்றது. 1977 ஆகஸ்டில் லண்டனில் மூன்று நாள் மாநாடு கூட்டி அபபோது விடுதலைக்காகப் போராடிய சிம்மாப்பேயின் தலைவர்களில் ஒருவரான "றெக்ஸ் சிவேரா" உட்படப் பல பிரமுகர்களின் மத்தியில் ஈழப் போராட்டத்தை அதன் பரிமாணத்தை துல்லியமாகத் துலங்க வைத்ததோடு ஈழப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணிக்கத் தயங்காதவர்களாய் லண்டனில் இருந்து வெளியேறி ஈழமண்ணில் வேரூன்ற முயன்றனர். எனினும் மாணவர் அமைப்பிற்கும்அதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் தலைமைக்கும் இடையிலான முரண்பாடு, நடைமுறையில் எழுந்த சிக்கல்கள் இன்னபிற காரணங்களால் இதுவும் கூட ஈழத்தில அனைத்து மாணவர்களையும் பிரதிபலிக்கும் ஒரு சக்தியாகப் பரிணமம் கொள்ளத் தவறிப் போயிற்று.

இந்த நிலையில் இன்றுமாணவர் மத்தியில் இருநது பல்வேறு அமைப்புக்கள் இனங்காட்டப் படுகின்றன. ''தமிழ் மாணவர் அமைப்பு'' 'தமிழீழ மாணவர் பேரவை' 'ஐக்கிய மாணவர் சங்கம்', 'விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு' எனப் பல மாணவர் அமைப்புக்களை உதாரணம் காட்ட முடியும். இவ்வாறு மாணவர் அமைப்புக்கள் தோற்றம் பெறுவதற்கு வெவ்வேறு சமூகவியல் காரணிகள் இருந்த போதும் விடுதலைக்காக போராடும் இயக்கங்கள் அனைத்தும் தமக்கென ஒரு ஊதுகுழல்களை—பிரச்சாரப பீரங்கிகளை உருவாக்க முயல்வதன் நேரடி விளைவும் ஒரு முக்கிய காரணம் என்பதை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. இவ்வமைபபுக்கள் தமக்கென பல நோக்கங்களையும் கொள்கைகளையும் கொண்டிருப்பதாகக் கூறிக் கொண்டாலும் அடிப்படையில் தாம் சார்ந்த தலைமையின் வீரப் பிரதாபங்களை வெளிப்படுத்தலும், ஏனைய அமைப்புக்களைக் கிண்டல் பண்ணுவதும் என்ற வகையில் ஒத்த கருத்தையும் செயற்பாடுகளையும் கொண்டுள்ளன. இதில் வேடிக்கை என்னவெனில் 'மாணவர்கள் மாபெரும் [illegible]தி' 'அனைவரும் ஓரணியில் [illegible]ளுங்கள்' எனக் கோஷித்த [illegible]யே தாம் ஏன் பிளவுபட்டுப் [illegible]ரோம் எனப்புரியாது உள்ள [illegible]ம் தான். ஓரணியில் திரளும் படியே ஒவ்வோர் அணியும் கூறும்போதும் தமக்கிடையான வேறுபாடுகள் வளருவதை அனுமதிக்கின்றனர்.

இயக்கங்களும் கூட மாணவர்களை அவர்களின் அரசியல் தரத்தை உயர்த்தி, நாட்டில் சமூக பொருளாதார நிலைமைகளைக் சுட்டிக்காட்டி விளக்கி எதிர்கால சமூகத்தின் சிற்பிகளாக மாற்ற வேண்டிய தங்கள் கடமையை மறுதலித்து. ஆயுதங்களில் மோகத்தை ஊட்டி கவர்ச்சியைக் காட்டி அரை மயக்க நிலையில் வைத்திருக்கவே விரும்புகின்றனர். இதனுல் 8ம் 9ம் தரத்தில் பயிலும் 14, 15 வயது மாணவர்களைக் கூட பயிற்சி மோகம் பீடிக்கிறது. பகட்டான பேச்சுக்களால் ஈர்த்துச் செலலப்படும் இத்தகு இளைஞர்களின் ஆசை, மோகம் ஒரு சில நாட்களிலேயே அற்றுப் போய் விட மீண்டும் வீடு நோக்கி ஓடிவிடுகின்றனர். இச்சந்தர்ப்பங்களில் பொறுமையிழந்த இயக்கங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் ஏனைய மாணவர்களைப் பயமுறுத்துவதுடன் பெற்றுரையும் ஏனைய உறவினர்களையும் கூட பதட்டமடைய வைத்து விடுகிறது. ஆனுல் பொறுப்போடு சிந்திக்க வேண்டிய இயக்கங்கள் சுத்த இராணுவக் கண்ணேட்டத்தில் இவற்றை அணுகுவதால் இயக்க வேறுபாடுகள் மேலும் சிக்கலுக்கு உள்ளாகிறது.

இந் நிலையைச் சீர் தூக்கிப் பார்த்து, மாணவர்கள் மத்தியில் அரசியல் தெளிவை ஊட்டுவது, மாணவர்களை ஒன்றுபடுத்துச் செயற்பட வைப்பது என்னும் அடிப்படை நோக்கங்களோடு ''நாங்கள்'' புறப்பட்டது. மாணவர் அமைப்பென்பது அரசியல் தலைமைகளைத் தக்க வைத்துக்கொள்ள ஆள் பிடிக்கும் ஒரு கருவியாக அல்லாமல் நாம் எதிர்நோக்கும் சிக்கல்கள், சிரமங்கள், தீர்வுகள் திறவுகோல் என்ற வகையில் தெளிவுபடுத்தும் ஒரு சக்தியாக 'நாங்கள்' புறப்பட்டது. 'நாங்கள்' பலம் பெறுவதன் மூலம் பலம்மிக்க ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப 'நாங்கள்' உறுதி பூணுவோம்.



---

# யாருக்கு வேண்டும்

# இந்த சுதந்திரம்?

நீ நாளைக்குப் படித்து பட்டம் பெறுவாய்' நீ படித்த விஞ்ஞானம் இங்கு யாருக்குமே தேவைபடாது, அவர்களது கட்டுமரமும் மண்வெட்டியுப் அவர்களுக்கு தோதுமானதாய் இருக்கிறது. அவற்ருல் பயனடைவதற்குத் தேவையான சமுதாய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு யாருக்மைம் விருப்பமில்லை. உன்னுடைய ஆற்றலைப் பயன்படுத்தும் ஆற்றல் அவகளுக்கு இல்லை. உனக்கு வேறுவழி இருக்காது'வெழநாட்டுச் சந்தையுல் உன்னைக் கொண்டு போய் நிறுத்துவாய். தாங்கள் என்ன செய்கின்ருர்கள் என்று விளங்கிக்கொண்டு மலர் வந்து உன்னைக் கைகொடுத்துக் கூட்டிக் கொண்டு போவார் நீ போய் யாருக்கோ உழைத்துக் கொண்டு, பண்டைய தமிழனின் வாழ்க்கையைப் புத்தகங்களில் படித்துப் பெருமைப் பட்டுக் கொண்டிருப்பாய். ஆனுல் உன்னவர்களோ கட்டுமரத்தோடும் மண்வெட்டியோடும் கொட்டில்களில் கிடந்து வறுமையில் வாடுவார்கள். யாருக்கு வேண்டும் இந்த இழிநிலை. யாருக்கு வேண்டும் இந்தச் சுதந்திரம்?

—லங்கா ராணி—



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "மலரப்போகும் ஈழம் பொருளாதாரச் சுமையைத் தாங்குமா?"

—தொடர்ச்சி

சென்ற இதழில் ஈழப்பிரதேசத்தில் கிடைக்கப்பெறும் வளங்கள் பற்றி மேலோட்டமாகவும் கடல்வளம் பற்றி சிறிது ஆழமாகவும் ஆராய்ந்திருந்தோம். எமது மண்ணிலே இயற்கையாகவே கிடைக்கும் இவ்வளங்கள் ஈழத்தின் செல்வங்களாக விளங்குகின்ற போதும் இதுபற்றிய அறிவு பொதுவாக மாணவர்களிடம குறைவாகவே காணப்படுகிறது. 'ஈழம கிடைத்தால் என்னத்தை வைத்துச் சாப்பிடுவது, எங்களுடைய பொருளாதாரம் என்ன'' என்ற வகையிலான கேள்விகளை எழுப்புபவர்கள் பலர் எம் மத்தியில் காணப்படுகின்றனர். இத் தொடர் கட்டுரையில் இம்முறை கனிவளம் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

ஈழப் பிரதேசத்தில் காரீயம், சுண்ணும்புக்கல், சிலிக்காமணல் (கண்ணுடி மணல்) இல்மனையிற், உப்பு, களிமண் போன்ற கனிப் பொருள் வளம் காணப்படுகின்றன.

**காரீயம் :**

ஸ்ரீலங்காவின் கனிப்பொருள் உற்பத்தியில் முதலிடத்தை வகிப்பது காரீயமாகும். இங்கு பெறப்படும் காரீயம் இக்கனிப் பொருள் பெறப்படும் நாடுகளின் தொகையுடன் ஒப்பிடும்போது அளவிலும் தொகையிலும் உயர்ந்ததாகவே காணப்படுகின்றது. இவ்வாறுன காரீயப் படிவுகள் ஸ்ரீலங்காவின் முக்கோணப் பிரதேசமான வவுனியா, நிக்கவரெட்டியா, தம்புல்லை, அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் கிடைக்கப் பெறுகின்றது. இத்தகைய இணைப்புப் பகுதியினுள் இப்படியான வலயம் காணப்படுகின்ற போதும் கால் பங்கு வவுனியா பகுதியினுள் அடங்குவது குறிப்பிடத்தக்கது. ஆனல் இதுபற்றிய ஆய்வு இன்றுவரை நிகழ்த்தப்படாமையினுல் சரியான கணிப்பீடுகளைப் பெறுவது கடினமாக



உள்ளது. காரீயமானது முக்கியமாக பென்சில், மின்கல அடுக்கு காரியப் பூச்சு போன்ற கைத்தொழில்களில் பயன்படுத்தப்படுகின்றது.

முக்கியமான மூலப் பொருட்களில் ஒன்றுகக் காணப்படும் சுண்ணக்கல் கூடியளவு இரசாயனத் தன்மை கொண்டது. சீமெந்து கண்ணுடி, கல்சியம், கார்பைட்டு, சீனி சுத்திகரித்தல், தோல் பதனிடுதல், செங்கல் ஓடு, மண் பாதுகாத்தல் போன்ற தொழில்களுக்கு சுண்ணக்கல் உபயோகிக்கப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து முல்லைத் தீவு வரை ஒரு கோடு வரையில் அக்கோட்டிற்கு வடக்கே மயோசின் காலச் சுண்ணும்புக்கல் படிவுள்ளது மன்னர் பகுதி, யாழ்பாணப் குடாநாடு, கிளிநொச்சி மாவட்டப் பகுதி, முல்லைத்தீவு மாவட்டப் பகுதி என்பன இக் கனிப்பொருள் கிடைக்கப் பெறும் பகுதிகளாக விளங்குகின்றது. சீமெந்து உற்பத்திக்கே பெருமளவில் இம் மூலப்பொருள் உபயோகிக்கப்படுகின்றது. இம் மூலவளத்தின் உபயோகத்தினை அதிகரிக்க வேண்டுமாயின் போக்குவரத்து வசதிகள் ஈழப்பிரதேசத்தினுள் அபிவிருத்தி செய்யப்படல் அவசியம். இதனூடாகவே அதிக பயனைப பெறமுடியும். 1976ம் ஆண்டு 647, 142 தொன் வரையிலும், 1978ல் 575, 061 தொன் வரையிலும் இம் மூலப் பொருள் பெறப்பட்டது. காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையின் உற்பத்தியினை பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.

**சீமெந்து உற்பத்தி** (காங்கேசன்)

| ஆண்டு | மெற்றிக் தொன் |
|---|---|
| 1977 | 1, 61, 860 |
| 1978 | 1, 91, 931 |
| 1979 | 2, 45, 194 |
| 1980 | 2, 00, 148 |
| 1981 | 2, 70, 062 |
| 1982 | 2, 71, 000 |

ஆதாரம் இலங்கை புள்ளி விபரக் கைநூல் 1982



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழப் பிரதேச மக்களது தேவையை உற்பத்தியில் 30% பூர்த்தி செய்யப் போதுமானது. மிகுதி 70%சீமெந்தினை ஏற்றுமதி செய்ய முடியும். ஈழத்தினுள்ளே திட்டமிட்ட வகையில் இம் மூலவளம் உபயோகப்படுமாயின் எமது அந்நிய செலாவணி உட்பாய்ச்சல் அதிகரிக்கப்படும்.

## இல்மனையிற்:

இல்மனையிற் ஈழப்பிரதேசத்தில் புல்மோட்டை திருக்கோயில் முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் காணப்படுகின்றது. திருகோணமலையிலிருந்து 32 மைல் தொலைவிலுள்ள புல்மோட்டையில் கறுப்பு மண்படிவு செறிவாக காணப்படுகின்றது. கடற்கரையிலிருந்து குவிக்கப்படும் ஒருவகை மண்ணிலிருந்து பெறப்படுகின்றது. புல்மோட்டை—கொக்கிளாய் பகுதிகளில் 50—60% செறிவுடைய இல்மனையிற் மண் காணப்படுகின்றது. இங்கு காணப்படும் படிவானது ஏறக்குறைய 200' அகலத்தில் நான்கு மைல் படிவப் பகுதிகளாகக் காணப்படுகின்றது. புல்மோட்டையில் இல்மனையிற் தொழிற்சாலை அமைந்துள்ளது. வடக்கே கொக்கிளாய் வரை கூடுதலாக படிந்து காணப்படுகின்றது 30—40 லட்சம் தொன் வரையில் படிவுகள் காணப்படுகின்ற அதே சமயம் திருக்கோயில் சார்ந்த பகுதிகளில் 5 லட்சம் தொன் வரையிலும் படிவுகள் காணப்படுகின்றது. 75 ஆண்டுகளுக்கு போதுமான இல்மனைற் உள்ளது. வருடா வருடம் யப்பானுக்கு 60, 000தொன் வரையில் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. புல் மோட்டையில் 1978ம் ஆண்டு உற்பத்தியாக 37, 260 தொன் காணப்பட்டது. இதன் மூலமான ஏற்றுமதி வருமானமாக 23.8 மில்லியன் ரூபாய் பெறப்பட்டது. பின்வரும் அட்டவணை வருட இல்மனைற் உற்பத்தியினை விளக்குகின்றது.

**இல்மனையிற்** (மெற்றிக் தொன்)

| ஆண்டு | ... | உற்பத்தி |
|---|---|---|
| 1977 | ... | 20, 137 |
| 1978 | ... | 35, 904 |
| 1979 | ... | 55, 370 |
| 1980 | ... | 29, 929 |
| 1981 | ... | 80, 011 |
| 1982 | ... | 60, 000 |

ஆதாரம்: புள்ளிவிபரக் கைநூல் 1982



இவ்வாறு சம்பாதிக்கப்படும் வெளிநாட்டுச் செலவாணி பக்கச் சார்பான அபிவிருத்திக்கே ஸ்ரீ லங்கா அரசினால் மேற்கொள்ளப்படுகின்றது. புல்மோட்டை கடற்கரையோரப் பகுதியிலிருந்து குறைந்தளவு 100 தொன் மண்ணை பெற முடியுமானால் கீழ்வரும் மூலங்களை எம்மால் பெற முடியும்.

| | |
|---|---|
| இல்மனைற் | 70 தொன் |
| RUTILE | 8 தொன் |
| ZIRCON | 6 தொன் |
| MANAzITE | 0 . 1 தொன் |

## உப்பு:

உப்பு எமது பகுதிகளில் சுயதேவைக்கும் அதிகமாக உற்பத்தியாகின்றது. கடல் நீரும் அதிக வறண்ட காலநிலையும் உப்பு உற்பத்திக்கு அவசியமாகும். சுயதேவைக்குபூர்த்தியாகி எஞ்சியவை அராபிய நாடுகளுக்கு காங்கேசன்துறையூடாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இம்மூலப் பொருளானது கறியுப்பு, எப்சம் உப்பு, குளோரின், பரிகச் சாந்து, வெண்கட்டி, ஐதரோக் குளோரிக்கமிலம், மேசை உப்பு போன்ற உற்பத்திகளில் உபயோகப்படுகின்றது. எமது எல்லைக்குள் அடங்கும் இம்மூலப் பொருள் உற்பத்தி பிரதேசமாக குறிஞ்சாத்தீவு, ஆனையிறவு, பாலாவி, யாழ்ப்பாணம் நிலாவெளி, மன்னார் என்பன விளங்குகின்றன. மேலும் வடக்கில் கல்லுண்டாய் பிரதேசம், செம்மணி ஆகிய பிரதேசங்கள் இவ்வுற்பத்தியை விருத்தி செய்யக்கூடிய அமைப்புக்களைக் கொண்டுள்ளன. ஆனையிறவில் வருடாவருட உற்பத்தியாக ஏறத்தாழ 50, 000 மெற்றிக் தொன் வரையில் காணப்படுகின்றது. மேலும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஆனையிறவு உப்பளத்தை அடிப்படையாகக் கொண்டே நிறுவப்பட்டது. உப்பின் உற்பத்தி பின்வருமாறு காணப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1976 | 140, 491 | தொன் |
| 1977 | 47, 853 | தொன் |
| 1978 | 152, 779 | தொன் |

## சிலிக்கா மணல்:

கண்ணாடி மணல் பருத்தித்துறையிலிருந்து முல்லைத்தீவு வரை கரையோரமாக பரவியுள்ளது. நாகர் கோயில், வல்லிபுரக்பகுதி

க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளில் மலையாகக் குவிந்து காணப்படுகின்றது. இதுவரை பயன் படுத்தப்படாத கனிப்பொருள் கண்ணாடி உற்பத்திக்கு உகந்தது. இவ்வளம் பற்றி கணிப்பீடு செய்யப்படவில்லை. அழியாத வளமாக் காணப்படுகின்றது. காற்றினால் அதாவது வடகீழ் பருவக் காற்றினால் தொடர்ச்சியாக ஓயாது சேர்க்கப்பட்டு வருகிறது.

**களிமண்:**

இது சீமெந்து உற்பத்திக்கான மூலப்பொருள் செங்கல், ஓடு சட்டி, பானைகள் செய்ய உகந்தது. களிமண் மன்னார் (முருங்கன்) முல்லைத்தீவு. கிளிநொச்சி பகுதிகளில் கிடைக்கப் பெறுகின்றன. முருங்கனிலிருந்து காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு தேவையான களிமண் பெறப்படுகின்றது. கண்டாவளையில் இம் மூலப்பொள் உற்பதி இயங்காத நிலையில் காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளில் களிமண் உண்டு. நீர்பாய்ச்சாக் குளங்கள் உள்ள பகுதிகளில் களிமண் கிடைக்கும்.

இவ்வாறு ஈழப் பிரதேசத்தில் பெறப்படும் மூலவளங்களை எவ்வாறு சுயதேவை பூர்த்தி பின்னரான ஏற்றுமதி என்பவற்றில் எவ்வாறு உபயோகிப்பது என்ற கேள்வி எம்முன்னே விரிந்து கிடக்கின்றது. கல்விமான்கள், விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள், உயர்கல்வி மாணவர்கள் இத்துறையில் தமது ஆய்வுகளை செய்வது அவசியமாக உள்ளது. —தொடரும்—

## மழலையரின் மனதுகளில் . . . மறைந்து கிடப்பவை!

மழலையரின் மனதுகளில் மறைந்து கிடப்பவைகளை அறிய ''நாங்கள்' ஆவல் கொண்டதன் விளைவே இப்பகுதி. 6-ம் தரம் — 10-ம் தரத்திற்கு இடைப்பட்ட மாணவர்களை அணுகிச் சில கேள்விகளை முன் வைத்தபோது அவர்கள் அளித்த பதிலின் சில வகைகள் இங்கு மாதிரிக்குத் தரப்படுகின்றது. இப் பதில்களை மையமாகக் கொண்டு ''மாணவர்களின் தற்போதைய எண்ணப்பாடு'' குறித்த ஆய்வுக் கட்டுரையை விரைவில் ''நாங்கள்'' பிரசுரிக்க ஆவன செய்யும்.

மேலும் ''நாங்களின்'' தரம் கருதி இப் பதில்களில காணப்பட்ட 'எழுத்துப் பிழை' 'சொற்பிழை' என்பனவற்றை மட்டும் இங்கு திருத்தியிருக்கிறோம். எனினும் இவைகள் வெளிப்படுத்தும் கருத்துகள் மாணவர்களின் எண்ணங்களே.

—ஆ-ர்—

## இன்றைய தமிழர் பிரச்சனையை ஸ்ரீலங்கா எவ்வாறு அணுகுகிறது?

எமது நாட்டு அரசாங்கம் பேச்சுவார்த்தைகள்மூலம் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாது. எமது நாட்டு இராணுவம் கண்டபடி தமிழரை சுட்டுக் கொலை செய்வது எல்லாம் சரியான செயலல்ல. இந்த அரசாங்கம் தமிழரை அழிக்கத் திட்டம்போடுகிறது. நமது நாட்டு அரசாங்கம் எப்பொழுதும் சரியான செயலைச் செய்யவில்லை. பிழையான செயலையே செய்துகொண்டிருக்கிறது. நமது நாட்டு தமிழ மக்கள் ஏன் அகதிகளாக இந்தியாவுக்குச் செல்ல வேண்டும். நமது நாட்டு இராணுவத்தினர் தமிழர்களது உடமைகளை எல்லாம் பறித்துவிட்டு சிலரைக் கொலை செய்தும் விடுகின்றனர். இந்தக் கொடுமைகள் எல்லாவற்றையும் தாங்காமல் வேறு நாட்டுக்குச் சென்று தப்பிக் கொள்கின்றனர். இவற்றையெல்லாம் அரசாங்கம் கவனிப்பதாகத் தெரியவில்லை. இளைஞர்களை சுட்டுக் கொலை செய்து விட்டு 'பயங்கரவாதிகளை சுட்டுக் கொன்று விட்டோம் என்று அரசாங்கம் கூறுகின்றது. இவையெல்லாம் சரியான செயலல்ல என்றே நாங்கள் கூறுகின்றோம்.

**8-ம் வகுப்பு**

மக்களைச் சுட்டும், உணவின்றியும், உடையின்றியும் மக்களை கொடுமைப்படுத்துகின்றது. அரசாங்கம் எமது பிரச்சனையை நீண்ட காலம் நீடித்து மக்களை கொன்று குவிக்கின்றது. தமிழர் பிரச்சனையைத் தீர்க்க எடுக்கும் தீர்வு தமிழ் மக்களைக் கொன்று அழிக்க வேண்டும் என்பதே. தமிழர் பிரச்சனையை அரசினால் தீர்க்க முடியா விட்டாலும் தமிழர் இந்தியாவிற்கும் வேறு சில நாடுகளுக்கும் சென்று முகாம்களில் வாழ்பவர்களைக் கூட வாழ விடுகின்றார்களில்லை. அவர்களை வேலை இன்றியும் வீடு இன்றியும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாசல் இன்றியும் இருக்கச் செய்வது இந்த அரசாங்கமாகும். இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு அநியாயம் செய்கின்றது, தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு தமிழர்களைக் கொன்றபின்னர்தான் அப்போதுதான் தமிழ் ஈழம் கிடைக்கும்.

### 6-ம் வகுப்பு

தமிழ் மக்களின் இல்லங்களைஅலங்கோலப்படுத்தி அழிக்கின்றது. எத்தனை தமிழ் மக்கள் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகியுள்ளனர். இராணுவம் தமிழ் இளைஞர்களை சித்திரவதைக்கு உள்ளாக்குகின்றது. எத்தனை அன்னையர் தமது புதல்வர்களை இராணுவம் பிடித்துக் கொண்டு போனதும் போர்க் கொடி தூக்கியுள்ளனர், உண்ணாவிரதம் இருந்துள்ளனர்! பல அப்பாவி இளைஞர்களை இயக்கம் என்று பிடித்துள்ளனர்.

ஏன் இவ்வளவும் செய்தது போதாதென்று எவ்வளவோ யுவதிகள் கற்பழிக்கப்பட்டு கொல்லப்படுகின்றனர். அரசு மாணவர்களது படிப்பினை குழப்பியும், பஸ் சேவைகளை நிறுத்தியும், பிரச்சனைகளை உருவாக்குகின்றது. வைத்திய சேவை ஸ்தம்பிக்கப் பட்டுள்ளது. இப்படிச் செய்தால் நாங்கள் வாழ்வது எப்படி, இதற்கு நாங்கள் ஒரு முடிவு எடுக்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்தால் தமிழ் மக்களின் எதிர் காலம் என்னவது? நாங்கள் முடிவு காணுவோம்.

''தமிழணங்கே! உன்துயரம் தீர வேண்டும்-தலை நிமிர்ந்து நாமெல்லாம் வாழவேண்டும்''

### 9-ம் வகுப்பு

**இளம் மாணவர்கள் இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருத்தலை நீர் விரும்புகிறீரா? அவர்களுக்கு பயிற்சி அளிப்பதை விரும்புகிறீரா?**

இளம் மாணவர்கள் இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருத்தல்விரும்பத்தக்கதன்று. அவர்கள் வாழ்க்கையின் முன்னேற்றப் பாதையில் கல்வியை கற்க வேண்டியதொன்றே அவர்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அன்றி இயக்கங்களுடன் தொடர்பு கொள்ளுதலோ அல்லது அவர்களுக்கு மறைமுகமாக



உதவி செய்வதோ பெற்றோர்களால் விரும்பத்தக்கதொன்றல்ல. பாடசாலைகளில் கூட்டங்கள் வைப்பது கல்விக்கு உலை வைப்பதாக அமையும். எல்லோரும் பயிற்சி பெறுகின்றார்கள் என்று நாமும் பயிற்சி பெறவேண்டும் என்ற எண்ணம் இன்றைய சமுதாயத்தில் வேரூன்றி விட்டது. போராட்டம் என்றால் என்னவென்று அறியாத மாணவர்கள் சிலர் தாம் இயக்கத்தில் சேர வேண்டும், இந்தியா செல்லவேண்டும் தமிழீழம் காணவேண்டும் என்கின்றனர், தமிழீழம் காண்பதில் உள்ள பிரச்சனைகளை அவர்கள் அறிவதில்லை ஒரு வெடிச்சத்தம் கேட்டாலே பாடசாலை நிறுத்தப்படவேண்டிய நிலையில் நாம் இருப்பதனை உணர்வதில்லை. இனிவரும் காலம் துப்பாக்கி ஏந்தியவர்களுக்கே என எண்ணுகின்றனர்.

இதற்கெல்லாம் மேலாக கவரொட்டிகளால் நன்மை என்ன, பாடசாலைகளில் நடக்கும் கூட்டங்களில் புத்தகப்படிப்பினால் ஒன்றும் நடக்கப் போவதில்லை எனக் கூறுகின்றனர். புரட்சிப் படிப்பு தான் அவசியம் துப்பாக்கி ஏந்த தயாராகுங்கள் எனசிலர் கூறுகின்றனர். சரி, ஈழம் பிடித்து விட்டாலும் ஈழத்தை நடைமுறைப்படுத்த ஒரு படித்தவன் கூட தேவையில்லையா? விடுதலையைப் பற்றிச் சிந்திப்பவர்கள் எதிர் கால கல்வியைப் பற்றி சிந்திக்க மறுக்கின்றார்கள். நான் இவையெல்லாம் அவசியமல்ல என நினைக்கின்றேன்.

### 10-ம் வகுப்பு

**இன்றைய நிலையில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையில் இயக்கங்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?**

தமிழர்களின் போராட்டத்தில் முன்னின்று போராடிவரும் தோழர்களே! நீங்கள் சில வேறுபாடுகளைக் கொண்டுள்ளீர்கள். வாகனம் கடத்தல், கொள்ளையடித்தல், மக்களைக் கடத்தல் போன்ற செயல்களை நீங்கள் தவிர்த்து,அனைத்து இயக்கங்களும் ஒன்று சேர்ந்து எதிரியான சிறிலங்கா ஏகாதிபத்தியத்தின் செயல்களை முறியடித்து தமிழ் மக்களுக்கு எவ்வித ஆபத்தும் வராமல் நீங்கள் செயற்பட வேண்டும். சில இயக்கங்கள் துப்பாக்கி முனையில் பணம் பறித்தல், வர்த்தகர்களைக் கடத்தி லஞ்சம் கேட்டல் போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள், இதனால் மக்கள், போராட்டத்தை வெறுக்கின்றார்கள். பகிஸ்கரிப்பினால் எங்கள் கல்வி பாதிக்கப்படுகின்றது. இனிமேலாவது இவற்றைத் தவிர்த்து ஒற்றுமையாக செயற்படுங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

— தமிழ் வாழ்க! ஈழம் வளர்க! —

1) நீங்கள் பாதுகாப்புப் படையினரோடு நேரடி மோதல்கள் செய்யும்போது தமிழ் மக்களுக்கு இடையூறுகள் ஏற்படலாம். இதனை முன்கூட்டி ஆலோசித்து செய்ய வேண்டும்.

2) பாதுகாப்பு படையினர் அப்பாவி மக்களை சுட்டுவிட்டு பயங்கரவாதிகள் என சிங்கள மக்களை ஏமாற்றுவது போல தமிழ் மக்களையும் ஏமாற்றுகிறார்கள் எனவே நீங்கள் ஒன்றுபட்டு அவர்களுக்கு எதிராக நடக்க வேண்டும்.

3) இயக்கங்கள் மீது சிலருக்கு கோபம் ஏற்படுகின்றது. இவ்வாறு ஏற்படாமல் நடவுங்கள்.

4) தமிழ், முஸ்லீம் மக்கள் மீது இராணுவம் குழப்பத்தினை ஏற்படுத்துகின்றன. இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5) ஏன் ஒன்றுசேர்ந்து போராடாமல் தனித்துப் போராடுகிறீர்கள்? ஒன்றுபட்டு போராடுங்கள்.

6) சில அறிவற்ற தமிழர்கள் காட்டிக் கொடுப்பதால் அவர்களுக்கு நீங்கள் கொடுக்கும் தண்டனை சரியானதே,

**9-ம் வகுப்பு**

இயக்கங்களைப் பற்றி றோட்டில் கண்டபடி பேச அனுமதிக்காதீர்கள்! இயக்கங்களுக்குள் பிரச்சனை ஏற்பட வழிவகுக்காதீர்கள்; இயக்கங்களின் பெயரைச் சொல்லி கொள்ளையடிக்காதீர்கள்; மக்களுக்காகப் போராடும் இயக்கங்கள் ஒன்று சேர வேண்டும். அளவுக்கு மிஞ்சி குடிக்கும் மனிதர்களை தண்டிக்க வேண்டும் இயக்கங்கள் கண்டபடி வீட்டுப் பிரச்சனைகளில் தலையிட வேண்டாம். தயவு செய்து மக்கள் நிற்கும் இடத்தில் போராடாதீர்கள்

**—இதுதான் எனக்குத் தெரிந்தது—**

**6ம் வகுப்பு**



**தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையும் தீர்வும்**

இச் சூழலில் எத்தனையோ பெரிய கஷ்டங்களை எதிர் நோக்குகிறார்கள். பயங்கரவாதிகளின் அட்டூழியங்களிலிருந்து விழிப்பாக இருக்கும்படி தேசிய பந்தோபஸ்து அமைச்சர் கூறுகின்றார். சண்டையில் பல இராணுவ வீரர்கள் இறந்தாலும் சிலர் இறந்ததாக இவ்வமைச்சர் பொய் சொல்லுகிறார், வீட்டிலுள்ளவர்களை இராணுவம் சுடுகின்றது. ஜனாதிபதியின் வட்டமேசை மகாநாட்டில் தீர்வு கிடைக்கவில்லை. அரைவாசித் தமிழர்கள் இறந்துவிட்டார்கள். அரசு அதனையும் பார்த்துக்கொண்டு இருக்கிறது. எனக்கு கோபம் கோபமாக வருகின்றது. நாம் இயக்கத்தின் உதவியை நாடி ஆயுதங்கள் எடுத்து இராணுவத்தினை சுட வேண்டும். எமக்கு ஈழம் வேண்டும்.

**6-ம் வகுப்பு**

நேற்று எனது ஊரில் கற்பகப் பிள்ளையார் கோவிலடியில் ஒரு பிரச்சனை நடந்தது. ஒரு மனிதன் சென்று கொண்டிருக்கும் போது இராணுவம் சுட்டுவிட்டது. இறந்தாரா என தெரியவில்லை தூக்கிக் கொண்டுபோய் விட்டனர். அவருக்கு பிள்ளைகள் மூன்றுமனைவி அமுத வண்ணம் இருக்கின்றார். இப்போது TELO EPRLF EROS, LTTE ஒன்று சேர்ந்து விட்டது. இவர்களிடம் ரிவோல்வர் தொடக்கம் மோட்டார் வரை உண்டு. நாங்கள் போராடவேண்டிய நிலை வந்து விட்டது. பொறுக்க முடியாது. குட்டக்குட்டக் குனிவதா, ஆயுதம் தாங்கிப் போராடுவோம்.

தீர்வு! தீர்வு!

தமிழ் தாய் காக்கப் போராடுவோம்! போராடுவோம்! ஆயுதம் தாங்கிப் போராடுவோம்!

**7-ம் வகுப்பு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஏ! யூதாஸ்!

மனிதனை மனிதனே தின்றகாலம்—இன்று
மீண்டிங்கு தந்ததன் கோலமென்ன?
நாடின்று சுடுகாடாய் மாறவிங்கு
நரிகளும் கழுகுகளும் உலா வருதே!
எங்கெங்கும் மரணத்தின் ஓலம் - நெஞ்சின்
ஏக்கமும் துயரமும் வாழ்வின் எச்சம்!
நம்பிக்கை தளராத மாந்தர் வாழ்வோ,
மாறாத போராட்டக் களமாயாச்சு!
தமது உயிர் விடுதலைக்காய் தந்தவீரர் - வழியினிலும்
எட்டப்பர் கூட்டமுண்டு!
கூடவே இருந்தின்று குழிபறிக்கும்,
குள்ளமனம் வாய்த்தவர்கள் நிறையவுண்டு!
காட்டிக் கொடுத்ததனால் மேன்மை பெற்றோர் - இங்கு
ஏராளம் ஏராளமாக உள்ளார்!
எத்தனையோ யூதாஸ்கள் எட்டப்பர்கள்,
எம்மிடையே இன்றும்தான் வாழ்கின்றார்கள்!
கோடரிக்காம்புகள் இந்த மண்ணில் - இந்த
கொடுமைக்குத் துணைபோகும் நிலைதான் என்னே!
வேதனை இவர்களின் நிலையை எண்ண,
வெட்கமும் மானமும் இவர்கட்குண்டா?
பணத்துக்காய் அடிமைகளாயானவர்கள் - இன்று
தம் இனத்தை அழிக்க வழி வகுத்து நின்றார்!
தன் மானம் மிக்க உயர் மறவர் குலம்,
தன் உரிமை இழந்து இன்று அடிமையாச்சு!
பயிரிடையே வளருகின்ற களைகளைபோல - இங்கு
பணத்துக்காய் காட்டி நிற்கும் எட்டப்பர்கள்
தன்னினமே தாழ்வு நிலை கொள்ள இன்று,
தன்னலமாய் வாழுகின்றார் இரக்கமின்றி!
விடுதலையே எங்களுயிர் மூச்சு என்றும் - இங்கு
வீண் காலம் போக்கியது போதுமினி!
போயொழிய வேண்டுமிந்த வஞ்சனைகள்,
நாளையே ஓர் விடிவுவரும் இதுவுறுதி!



## பிறேசிலின் போராட்ட முன்னணியில் மாணவர்களது தலைமை

பிறேசிலின் போராட்ட வரலாற்றில் 1963 ம் ஆண்டின் முடிவில் புரட்சிகர சூழ்நிலையை முறியடிக்க எதிர்ப் புரட்சியாளர்கள் உள் நாட்டு சதியொன்றுக்குத் தயாராகியபோது பிறேசில் நாட்டு மாணவர் இயக்கம் ஒழுங்கமைக்கப்பட்ட ஒன்றாகவும், முதிர்ச்சி பெற்ற ஒன்றாகவும், ஏனைய பொது மக்கள் இயக்கங்களுள் ஒன்றாகவும் காணப்பட்டது. 1964 இல் நடைபெற்ற இந்த சதிப புரட்சியின் பின்னர் ஏனைய மக்கள இயக்கங்கள் ஒடுக்கப்பட்டதனைத் தொடர்ந்து மாணவர் இயக்கமே செயற்படக் கூடியதாகக்காணப்பட்டது. எனவே'முற்போக்கு அணி'' என்ற வகையில் மாணவர்களே உருவான புதிய சர்வாதிகார ஆட்சியினை எதிர்த்துப் போராடும் பொறுப்பினை ஏற்றிருந்தனர். இந்த எதிர்ப்பு போராட்டமே பின்னர் பிறேசிலின் ஆயுதப் போராட்டத்திற்கான ஆரம்ப கர்த்தாக்களை உருவாக்கக்கூடியதாக அமைந்தது.

### மாணவர் போராட்டத்தின் எழுச்சி

1966 யூலை வரை சட்டபூர்வமாக காணப்பட்ட பிறேசிலின் தேசிய மாணவர் ஒன்றியம் பிற்போக்கு வாதியானகல்வி அமைச்சரின் திட்டங்களின் மூலம் பழிவாங்கப்பட்டும் தடைசெய்யப்பட்டும் பல்கலைக்கழகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட அரசியல் சார்பற்ற ஆணைக்குழுக்களாகவும் மாற்றி அமைக்கப்பட்டது. மாணவர் எழுச்சியை ஒடுக்கும் வகையிலான இச்சட்டம்'சப்பிளிசிக்' சட்டம் என அழைக்கப்பட்டது. இச்சட்டத்தினை எதிர்க்கும் நடவடிக்கையைத் தொடர்ந்து மாணவர் இயககம் ஒரு அரசியல் இயக்கமாக உருப்பெறலாயிற்று 1967 ல் பிறேசிலின் பொதுவுடமைக்கட்சி மாணவர்களிடையே செல்வாக்கினை இழந்திருந்தது. புதிய ''சப்ளிசிக்'' சட்டத்தின் பிரகாரம் பல்கலைக்கழக ஆணைக்குழுவை தமது ஆதிக்கத்திற் குட்படுத்தக் கூடிய வகையிலான தேர்தலை அரசு உருவாக்கியது. இதனால் உருவான ஆணைக்குழு சக்தியற்றதாகவும் வெறும் சட்டங்களை உருவாக்குபவையாக மட்டுமே காணப்பட்டது.

இவ்வாரம்ப எழுச்சியே 1968 இல் நடைபெற்ற எழுச்சிக்கான அடிப்படையாக விளங்கியது. 1966 இல் சாபோவாலில் மாணவர்கள் காட்டிய எதிர்ப்புகளும் றியோடி ஜெனிரோ பல்கலைக்சழகத்து மாணவர்கள் பொலிசாரை எதிர்த்துக் காட்டிய போராட்டமும், தொடர்ந்து அரச படைகளினால் இவர்கள் தாக்கப்பட்டமையும் அடிப்படை 'போராட்ட' அனுபவத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தை மாணவர்களுக்கு அளித்திருந்தது. மக்கள் இதன் மூலம் அரசியலில் ஒரு புதிய யுகம் உருவாகுவதாக நம்பினர்.

1968 இல் றியோ-டி ஜெனிரோவில் இடம்பெற்ற அரசிற்கெதிரான மாணவர் ஆர்ப்பாட்டங்களின்போது எட்சன் லூயி என்ற மாணவன் அதிரடிப்படையினரால் கொல்லப்பட்டதினைத் தொடர்ந்து போராட்டம்வலுப் பெறலாயிற்று. அதாவது அரச படையினருக்கும் மாணவர்களுக்கும் இடையில் மூர்க்கமான போராட்டம் மூளலாயிற்று. மாணவர்கள் மக்களை அணிதிரட்டி "சர்வாதிகாரத்தை எதிர்த்து வீழ்த்தும் வகையில் போராட்டத்தை உருவாக்கினர். பிறேசிலின் தென்கிழக்குப் பகுதிகளான சாபோலா, றியோ-டி, ஜெனிரோ,பெலோ,பிறேசிலியா போன்ற முக்கிய நகரங்களில் மாணவர் இயக்கங்கள் பெரும் எதிர்ப்பு போராட்டத்தினை நடாத்தினர். இவ்வாறான மாணவர்சக்தியினை முறியடிக்கும்வகையிலும்,அமெரிக்க சார்பான திட்டங்களை விரிவுபடுத்தும் வகையிலும் தனியாரிடம் பல்கலைக்கழகங்கள் கையளிக்கும் திட்டங்கள் உருவாக்கப்பட்டது. அதாவது மெக்-யூஎஸ்எயிட்என்ற அமைப்பினூடாக அமெரிக்க சார்பு அமைப்புக்களை பல்கலைக்கழகத்தினுள் புகுத்த அரசு முனையலாயிற்று. இதன் மூலம் பல்கலைக்கழகம் இடதுசாரி சித்தாந்த ரீதியில் வளர்வதனையும் இராணுவமய மாக்கப்படுவதனையும் தடைசெய்ய முயற்சி எடுக்கப்பட்டது. அதாவது மாணவர் இயக்கங்களின் சுதந்திர அமைப்புகளை எவ்விதத்திலும் கலைத்து விட முடியாத நிலையில் அரசு காணப்பட்டதனால் பல்கலைக் கழகங்களை தமது பிடியினுள் வைத்திருக்க அரசு முயற்சி எடுத்தது. இந்த சமயத்தில் பல்கலைக் கழகம் அரசியல் விமர்சன நிலையமாகவும் கிளர்ச்சி, பிரசாரம் என்பவற்றை மேற்கொள்பனவாகவும் விளங்கியதுடன் அப்போதைய சர்வாதிகார அரசினை எதிர்த்ததுடன் சோஷலிஸ அமைப்பை நோக்கி நாடு செல்லும் வகையிலான நடவடிக்கைகளை எடுக்கும் நிலையமாகவும் விளங்கியது.ஆரம்ப காலங்களில் மாணவர் இயக்கத்தின் பலத்தினைக் கண்டு அரசு சஞ்சலமடையலாயிற்று. ஓரளவிற்கு மக்களை அணிதிரட்டி குட்டிபூர்ஷ்வாக்களையும் தொழிலாளர்களையும் இணைத்து எதிர்ப்புபோராட்டங்களை பெருமளவில் மாணவர் இயக்கங்கள் உருவாக்கிய போதும் இவர்கள் சமூகத்தில் "இடைநிலை அடுக்குகளாகவே" கருதப்பட்டனர்.

## மாணர்கள் நேரடியான போராட்டத்தில்

மாணவர்கள் நகர மக்களை இணைத்த சகல விதமான போராட்டங்களையும் நடைமுறைப்படுத்தினர். அதாவது திடீரென ஓரிடத்தில் அணிதிரளுதல் மக்கள் பெருமளவில் கூடும் இடங்களுக்கு கிளர்ச்சியாளர்களை திட்டமிட்டு அனுப்புதல், பிரதான வீதிகளில் ஆர்ப்பாட்டங்கள் செய்தல், குறித்த சில இடங்களை உரிமை கோருதல், அடக்கு முறை அரசபடைகளுடன் நேரடியாக மோதுதல் போன்ற பல்வேறு முறைகளை இந்நாட்டு மாணவர்கள் கையாண்டனர். 1968 யூனில் நடைபெற்ற இவ்வாறான எதிர்ப்பு போராட்டத்தின் போது இம்மாணவர் இயக்கம் ஒரு உச்சநிலையில் காணப்பட்டது. இவ்வாறான போராட்டததினை மாணவர்கள் ஒழுங்குபடுத்தியதன் மூலம் சர்வாதிகார எதிர்ப்பிற்கு மக்களின் ஆதரவை வளக்கினர். 1968 யூன் மாதத்தில் இம்மாணவர்களது போராட்டம் ஒரு ஆயுதமேந்திய போராட்டமாக மாற்றமடைந்தது.

இதனை விளக்க மாணவர் ஒன்றியம் தனது எதிர்ப்பு ஊர்வலத்தின்போது மாணவர் தலைவர் "ஒழுங்கமைக்கப்பட்ட மக்கள் சக்தி மூலம் சர்வாதிகாரத்தை வீழ்த்தலாம்" என எழுப்பிய கோஷத்தினைத் தொடர்ந்து ஊர்வலத்தில் பங்குபற்றியோர் "ஆயுதந்தாங்கிய மக்களேசர்வாதிகாரத்தை வீழ்த்துவர்" எனமாற்றி கோஷமிட்ட நிகழ்ச்சியினை ஆராய்தல் வேண்டும். தொடர்ந்து ஊர்வலத்தின்போது மோட்டார் வண்டிகளும் பேருந்துகளும் செயலிழக்கப்பட்டன. மக்களைத் தொடர்ந்து போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கோரிக்கை விடப்பட்டது. கல்விச் செயலகம் தாக்கப்பட்டது. நகர் எங்கும் தீ வைக்கப்பட்டது. சுவர்கள், திரைகள் போன்றவை அரசிற்கெதிரான சுலோகஙகளால் நிறைக்கப்பட்டது. தொடர்ந்து குண்டு வெடிப்புக்கள் நிகழ்த்தப்பட்டன. இவ்வாறு போராட்டம் உருப்பெருக்கலாயிற்று.

இதனைத்தொடர்நது இராணுவத்தின் மூலம் பல்கலைக்கழகத்தை முற்றுகையிட அரசு தயங்கலாயிற்று. இச்சமயத்தில் இராணுவம் முற்றுகையிடலாம் என்பதாலதமதுமாணவர் சுயபாதுகாப்பு இராணுவத்தை அமைத்து காவல் காக்கலாயினர். பல்கலைக்கழக வளவினுள்ளேயே தொடர்ந்து இருந்த மாணவர்களுக்கு அரசியல் சித்தாந்த தெளிவுஏற்படுத்தப்பட்டது. உயர்நிலை கல்லூரிகளின் இளம் மாணவர்களும் இதில் கலந்து கொண்டனர். இரா

மாணவர்கள் மாக்ஸீஸத்தையும் அதன் வழிமுறைகளையும் கற்கவும் கற்பிக்கவும் கூடிய வாய்ப்பான நிலையில் இருப்பதால் புரட்சிகர போராட்டத்தில் அவர்களது பங்கு சித்தாந்த ரீதியில் முக்கியமானது என கருதப்படுகிறது. புரட்சிகரப் போராட்டத்தின் பொதுவான இயல்புகளையும் தேவைகளையும் ஒதுக்கி விட்டு தங்களை முன்னணி அமைப்பு என வாதிடுவது உண்மையாக இருக்கலாம். ஆனல் இவை மாணவர் மத்தியில் மட்டுமே நிலைக்க முடியும். ஆயுதம் தாங்கிய இயக்கங்களில் மாணவர் போராட்டம் ஒரு ஒழிவு மறைவு போராட்டத்திற்கான பயிற்சிக்களமாகக் கருதப்படுகிறது என்பதனையும் நாம் நிராகரிக்க வேண்டும்.

குவாட்டிங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ணுவ நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இவ்வாறு அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் வளர்ச்சி பெற்ற மாணவர் இயக்கங்களுக்கு புத்திஜீவிகள், கலைஞர்கள், நடிகர்கள், நடிகைகள் மட்டங்கள் மத்தியிலும் ஆதரவு கிடைக்கலாயிற்று. இதனை ஒடுக்கும் வகையில் இவர்களை நேரடியாகத் தாக்கியும் நிர்வாணமாக்கியும் பல்வேறுபட்ட வன் செயல்களை அரசு தொடர்ச்சியாக செய்யலாயிற்று.


தொடர்ந்து மாணவர் போராட்டம் வலுப்பெற்றதனைத் தொடர்ந்து ஆயுதந்தரித்த அரசு படையினர் சா-போலா மெய்யியல் பீடத்தை முற்றாக அழித்தனர். மாணவர்கள் மீது நேரடியாக துப்பாக்கிச் சூடுகளை நடத்தியபோதும், மாணவர்களும் எதிர்த்து நிற்கலாயினர். இத் தாக்குதலின்போது ஒரு உயர்நிலைக் கல்லூரி மாணவன் சுட்டுக் கொலலப்பட்டான். தொடர்ந்த ஐக்கிய மாணவர் ஒன்றியத்தை பண்ணை ஒன்றில் அரசு கைது செய்யமாட்டாது என்ற கருத்தில் 1000- மேற்பட்டவர்களை இம் மாநாட்டில் கலந்து கொள்ள அழைத்திருந்தனர் ஆனுல் அரசு எவ்வித தயக்கமும் காட்டாது பண்ணையைச் சுற்றி வளைத்து 800 பேரைக் கைது செய்தது. இதனைத் தொடர்ந்து மாணவர் இயக்கம் தற்காலிகமாக செயலிழக்கலாயிற்று.

## மாணவர் இயக்கமும் புரட்சிகர இயக்கங்களும்

சர்வாதிகாரத்தை எதிர்க்கும் ஆயுதமேந்திய புரட்சிகர இயக்கங்களாக விளங்கிய பொதுமக்கள் இயக்கம் (Popular Action-Ap)Aln புரட்சிகர இயக்கம் (Mr8)போன்றவை நடாத்திய அரசுக்கெதிரான போராட்ட நடவடிக்கைகளின் மூலம் மாணவர் இயக்கங்கள் மீண்டும் சக்தி பெறலாயிற்று. 1968-இல் ஓரளவு பினவாங்க நேர்ந்தாலும் இவ்வியக்கங்களின் நடவடிக்கைகளான பணயம் வைத்தல் போன்ற நிகழ்ச்சிகளை நசுக்குவது என்பதே அரசின் நடவடிக்கையாகக் காணப் பட்டது. தலைமறைவு இயக்கமாகவும் தலைமறைவாகவே தமது அரசியல் திட்டங்களைக் கட்டும் இம் மாணவர் ஒன்றியம் அரசினை தமது பலம் பற்றி உணரச் செய்ய வேண்டும் எனக் கருதலாயினர். கிராமத்திற்கு வெளியே உள்ள பல மாணவர் தலைவர்கள் விடுவிக்கப்பட்டனர். அரசு சார்பான "ஜனநாயக மாணவர் ஒன்றியம்" எதுவுமே சாதிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. இம்மாணவர் ஒன்றியத்திலிருந்த பலரே இப் புரட்சிகர இயக்கங்களில் இணைந்தனர். இயக்கங்கள், மாணவர் போராட்டத்தை ஆதரிக்கும் வழிவகைகள், அதனை வளர்க்கும் முறைகள், அதற்கான அரசியல் அறிவுகள், என்பவற்றை மாணவர் உருவாக்கியிருந்த நடவடிக்கைகள் மூலம் கண்டறிந்திருந்தனர். அதாவது மாணவருடைய புரட்சிகர போராட்ட இயக்க ஆற்றல் என்ன? மாணவர் இயக்கத்திற்கு போராட்டத்தில் உள்ள குறித்த பங்கு என்ன? போன்ற கேள்விகளுக்கான விடைகளை கடந்த மாணவர் போராட்டம் மூலம் கண்டறியக்கூடியதாக அமைந்தது.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இவர்களும் அவர்களும்...

[சிறுகதை]

ஆலமரத்தடியில் நின்ற மூன்று இளைஞர்களும் ''அந்த'' வீட்டையே வெறித்துக் கொண்டிருந்தனர் 'அந்த' வீட்டினுள், சனவெள்ளம் அலைமோதியது. அதாவது வெளிநாட்டு ஆதரவு நிறைந்திருந்தது.

''நீ என்னதான் சொல்லு! உயிருக்குப் பயந்து, வெளிநாடு செல்கிறதை நான் முற்றாக வெறுக்கிறேன்'' ஆத்திரத்துடன் சொன்னான், மூவருள் ஒருவனான வாசு.

''யார்தான் இல்லை என்டது. இவர்களெல்லாம் வெறும் கோழைகள்'' வெறுப்பினை உமிழ்ந்தான் சிவா.

மூன்றாமவனான ரவி இவற்றை ஆமோதிக்கும் வகையில் புன்னகைக்கின்றான்.

இவர்கள் மூவரும் நண்பர்கள். (தம்மிடையே தோழர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் ) சிவாவும், வாசுவும் யாழ் பல்கலைக் கழகத்தில் படிப்பவர்கள். ரவி பல்கலைக்கழகப் படிப்புக்கு முழுக்குப் போட்டவன்!

இவர்களது, இந்தக் காரசாரமான பேச்சுக்குக் காரணம் 'அந்த' வீட்டுப் பெரியவரின் மரணச்சடங்குக்கு உலகின் முத்திசைகளில் இருந்தும் பெரியவரின் பிள்ளைகள் வந்திருந்தார்கள் இன்றுடன் மரணச் சடங்கு முடிந்து ஏழு நாட்களாகி விட்டன. பெரியவரின் பிள்ளைகள் தங்கள் பயணத்திற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர்.

'வந்தவர்கள் போகிறார்களே' என்ற துக்கத்தில் வழியனுப்ப வந்தவர்களாலும்கடைசி நேரத்தில் ஏதும் 'வறுகலாமா' என்று ஏங்கினவர்களுமாக ''அந்த'' வீடு நிறைந்து காணப்பட்டது.

'தாங்களும், தங்கள் சொந்தமும் உயிருடன் சுகமாக வாழ வேண்டும். ஏகபோகம் எங்கள் மோகம் என்றெல்லாம், வெளிநாடு ஓடுபவர்களை இயன்றளவு தடுக்க வேண்டும்' கோபத்துடன் முழங்குகிறான் வாசு. அவன் எப்போதுமே சற்று முற்கோபக்காரன்.

''பொறு, அவசரப்பட வேண்டாம். நாம், அந்தப்பெரியவரின் மகனிடம் 'இதைப் பற்றிக் கதைப்போம். மாலை ஆறு மணியளவில் 'அந்த' வீட்டுக்குப் போவோம்' ரவி கூற, அதைஆமோதித்து நண்பர்கள் பிரிகின்றனர்.

மாலை ஆறுமணியளவில் திட்டமிட்டபடி மூவரும் 'அந்த' வீட்டினுள் நுழைகின்றனர். வாசலில் ஒருவர் நின்றிருந்தார். அவரை நெருங்கிய சிவா அவரிடம் 'நாங்கள்...சார்பாக வந்திருக்கிறோம். பெரியவ



ரின் மகனைச் சந்திக்கவிரும்புகிறோம்'' என்றான்.

வாசலில் நின்றவர் உள்ளூர்க்காரர் போலிருந்தார். போனவர் திரும்பிவர நேரம் எடுத்தது. அதுவரை மூன்று இளைஞர்களும் வாசலில் நிறுத்தப்பட்டிருந்த, படகு போன்ற வெளிநாட்டுக் காரில் சாய்ந்தவாறு நிற்கின்றனர்.

சற்று நேரத்தில் சுமார் 45 வயது மதிக்கத்தக்க, பெரியவரின் மகன் இவர்களை நோக்கி மிடுக்குடன் வந்தார். வெளிநாட்டு 'சென்றின்' மணம், இவர்கள் நாசியைத் துளைத்தது. இவரைக் கண்டதும் சிவா மீண்டும் 'நாங்கள்...சார்பா' எனத் தொடங்க, அவர் நுனிநாக்கு ஆங்கிலத்தில் 'இயா, இயா' எனக் கூறியவாறு 'ஸ்டைலாக' பொக்கட்டினுள் இருந்து, 100 ரூபாநோட்டை எடுத்து இவர்களிடம் நீட்டுகிறார்.

இதற்கிடையில் பக்கத்தில் நின்ற உள்ளூர்க்காரர் இவர்களை நோக்கி இவர் இப்போது சரியான பிஸி! நிறைய விசிட்டேர்ஸ் காத்துக் கொண்டிருக்கினம். 6 மணிக்கு கேர்பியூ கதவைபூட்டவேண்டும்' என்றார்.

இதைக் கேட்டதும் இளைஞர்கள் முகத்தில் கருமைபடர்ந்தது. எனினும் சிரித்தவண்ணமே நின்றனர்.

அச்சமயத்தில் ரவி அவர் நீட்டிய பணத்தைச் சுட்டிக்காட்டி ''இது என்னத்துக்கு'' என்றான்.

'why why' ஆச்சரியத்துடன் தானும் கேட்டார், அந்தப் பெரியவரின் மகன்.

' நாங்கள் இயக்கம் எண்டவுடன் உடனடியாக சிந்திக்காதுகுறிப்பிட்ட இப்படியான ஆதரவுகளை ஏற்பதில்லை! **எங்கள் போராட்டம் மக்களை அணிதிரட்டிய மக்கள் போராட்டம்**' நிதானமாகச் சொன்னான் ரவி.

அவன் கொடுத்த திடீர்தாக்குதலால் நிலைகுலைந்து போன பெரியவரின் மகன் இளகிய குரலில் ''On my age of fifteen I left the I sland, and now only I am back here, now my mind is not peaceful. I am highly worried about my father's death', என்றார்.

உயிருடன் இருந்தபோது 30 வருடம் காணவராமல், இறந்த உடலைப் பார்க்கத்தான் வந்தாரா என்று மனதில் நினைத்தான் வாசு. ஆனால் வார்த்தை வெளிவரவில்லை. தொடர்ந்தும் பெரியவரின் மகன், ''When I was youngster like you I was a bl oody revolutionist. I admire Che! Castro!! எனது அறையில் இவர்கள் படமெல்லாம் மாட்டிவைத்துள்ளேன். Even I love my Jaffna. I am a St. Johns boy'' எனப் பலவாறாகத் தன் இயல்புகளை வெளியிட முயன்றார்.

பொறுமையுடன் இருந்த இளைஞர்கள் தமது அமைப்பின் வெளியீடுகளை அவரிடம் நீட்டினார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நீங்கள் உங்களுக்கு நேரமிருந்தால் இவற்றை வாசியுங்கள். இதிலுள்ள விலாசங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் மண் மீது உங்களுக்கு நேசமிருந்தால் அதை நிச்சயம் செய்யுங்கள். மக்கள் பார்வையாளராக இருப்பதை நாம் முற்ருக வெறுக்கிருேம்'' நிதானமாகச் சொல்கிருன் வாசு.

"Certainly Certainly'' என்று ஆமோதித்த அப்பெரியவரின் மகன் தொடர்ந்து, 'we are Married people Living with Family but we the Tamils in London Are Contrbuting Some Funds. We ThinK it is better to go for a negotiation t h a n w a r y o u all groups must unite.'' எனக்கூறி, லண்டனில் வாழும் தமிழர்களின் 'கருத்தை' விளக்குகிருர்.

அதைக் கேட்டதும் அந்த இளைஞர்களது முகங்கள் வேதனையாற்சுருங்கியது. அவர்களது இருதயக் கூட்டினூடாக கிளர்ந்தெழும் உறுதி நன்ருக இறுக்கமடைகிறது.

"Armed struggle only armed struggle and seperate state and it will be Eelam'' என உறுதியுடன் கூறுகிருன் ரவி.

எங்கள் கருத்துக்களைப் புரிந்து கொள்ளாத எவருடைய பங்களிப்பையும் நாம் ஏற்றுக் கொள்வதில்லை'' எனக்கூறினுன் சிவா.

"நீங்கள் இன்று 'பிஸி'யாக இருப்பீர்கள். நாங்கள் போகிருேம் வேறுநேரம் வந்து சந்திக்கிடருேம்' உணர்ச்சியற்ற குரலில் சொல்கிருன் வாசு.

மூவரும் திரும்பிப் போக முயல்கின்றனர். பெரியவரின் மகனும் தழுதழுத்த குரலில் 'So this Money...'' என்கிருர். "நாங்கள் கொள்கையில் என்றுமே விட்டுக் கொடுப்பதில்லை'' என்று கூறித்திரும்பி நடக்கிருன் அவனை, மற்ற இருவரும் தொடர்கின்றனர்.

பெரியவரின் மகனும் மிகுந்த வேதனையுடன் 'அந்த' வீட்டினுள்ளே போகின்ருர்.

வீதியில் இராணுவம் அணிமிப்பதை திடீரெனக் கண்டதும் மூவரும் சைக்கிளைப் போட்டுவிட்டு ஓடுகிருர்கள். அவர்களுள் ரவியின் கால்களைத் தெருவில் கிடந்த போத்தல் சில்லுகள் பதம் பார்க்கின்றன. ஈரமற்ற அந்த மண்ணை, இவர்கள் உதிரம் நனைக்கின்றது. என்ருலும் தயங்காமல் சுவரேறிக் குதித்து தப்பி ஓடிவிடுகிருர்கள், அந்தப்போராளிகள்.!

அவர்களது பணி மீண்டும் தொடங்கப்படுகிறது.

இவரது பயணம் ஆயத்தமாக்கப்படுகிறது.

---

மாணவர்கள் குடித்தொகையின் இடைநிலை அடுக்குகளாக கொள்ளப்படுபவர்கள். இவர்கள ஆளும் வர்க்கமல்லர். விவசாயிகள் அல்லர் தொழிலாளர் வர்க்கத்திலிருந்து முற்ருக வேறுபட்டவர்கள்; எதிர்காலப் புத்திஜீவிகள்; ஆட்சியுள்ள குழுவினரல்லர்; ஆட்சியுள்ள குழுவினருடன் இவர்களது தொடர்பு தெளிவற்றது. எனவே இவற்றை விமர்சிக்கும் முன்னர் அதனைப்பற்றி நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

---

# அடக்குமுறைக்கு எதிராக... பல்கலைக்கழக......

கடந்த 21-05-85 அன்று யாழ் பல்கலைக்கழக மாணவரவை ஒழுங்கு செய்து நடைமுறைப்படுத்திய எதிர்ப்பு நடவடிக்கையும் தொடர்ந்த உண்ணுவிரதமும் அனைத்து அடக்குமுறைகளுக்கும் ஒரு சவாலாக அமைந்திருந்தது. அதாவது இவ்வெதிர்ப்பு போராட்டத்திற்கு மாணவர் இளைஞர் பொதுமன்றம் தனது ஆதரவினை வழங்கியதுடன் இவ்வாதரவுபற்றி ஒரு துண்டுப்பிரசுரமும் வெளியிட்டிருந்தது. ஆயினும் இவ்விதமான சாத்வீகப் போராட்டம் மாற்றப்படல் வேண்டுமென்றே மாணவர் இளைஞர் பொதுமன்றம் தனது துண்டுப் பிரசுரத்தில் வெளியிட்டிருந்தது.

இந்த எதிர்ப்பு போராட்டம் பற்றி "நாங்கள்" விமர்சிக்க விரும்பவில்லையானும் ஒருசில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் "இப் புத்திஜீவிகள் நிறைந்திருந்த வளாகத்தினுள் நடைபெற்றதனை குறிப்பிட்டேயாகவேண்டிய நிலையில் உள்ளோம். அதாவது உண்ணுவிரதத்தில் கலந்துகொண்டு நியாயபூர்வமாக கடைப்பிடித்தவர்கள் பலர் காணப்பட்டபோதும் ஒழுங்கற்ற முறையில் ஒவ்வொரு 5 நிமிடத்துக்கும் இருவர் வீதம் வெளியேறுவதும் பின்னர் உண்ணுவிரதத்தில் கலந்து கொள்பவர்களாகவும் காணப்பட்டனர்.

இவற்றுக்கு மேலாக ஈழப்பிரதேசத்தினுள் காணப்படும் சகல கடைகளும் அடைக்கப்படல் வேண்டுமென கோரிக்கைகளாகவும் வற்புறுத்தல்களாகவும் விடுக்கப்பட்டு தமது போராட்டத்திற்கு மாணவர் அவை வழியினை உருவாக்கியது. இதனுல் யாழ் பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலையின் முன்புறக் கதவும் அடைக்கப்பட்டிருந்தது. மாருக பின்புறக்கதவு திறக்கப்பட்டு தேனீர், சிற்றுண்டி வகைகள் என்பன விற்பனை செய்யப்பட்டமை மிகவும் வருந்தத்தக்க செயலாகும். மாணவர்கள் போராட்டத்தில் முன்னணி வகிக்கவேண்டியவர்கள்; இவர்களே தமது நிர்வாகத்தை களங்கப்படுத்தக்கூடாது என்பதற்காகவும் எதிர்காலத்தில் இந்த மாசற்ற மாணவர் இயக்கம் எழுச்சியுற வேண்டும் என்ற ஒரு நோக்குடன் மாத்திரம் இதனை வெளியிடுகிருேம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

EROS IS THE
ETHOS
OF EELAVAR

Says Saturday Review

# ஈழவரின் சுபீட்சவாழ்வுக்கு வழிகாட்டி ஈரோஸ் அமைப்பே

**[ஈழத்திலிருந்து வெளியாகும், காமினி நவரட்ணே என்பவரை ஆசிரியராய்க் கொண்ட SATURDAY REVIEW இன் பார்வையில்]**

ஈரோஸ் எனப்பொதுவாக அழைக்கப்படும் ஈழப்புரட்சி அமைப்பின் கொள்கை, வரலாற்றுப் பின்னணி, செயல்முறை என்பவற்றை இங்கு ஆராயலாம்.

ஈழத்தில் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக ஆயுதமேந்திப் போராடும் இயக்கங்களில் ஈரோஸ் இயக்கம் வலுவான இயக்கமென்பது யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும் ஸ்ரீலங்கா வாழ் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளையும், அவர்கள் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளையும் விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து தமிழ் பேசும் மக்களின் ஒரே நோக்கமான தனிநாடான 'ஈழம்'தான் அவர்களுக்கான ஒரே தீர்வாகுமென்று 1975-11-23 ந் தேதி ஈழஆய்வு நிறுவனம் பிரகடனப்படுத்தியது.

மேலும் இந்தப் பிரகடனமானது குறிப்பிட்ட தனிநாடு, மன்னார்முதல் மட்டக்களப்புவரை - பருத்தித்துறை முதல் பதுளைவரை - பொத்துவில் உள்ளடங்கிய பிரதேசமே என வரையறை செய்தது. மேலும் இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களனைவரும் அவர்களது சமய சமூக வேறுபாடுகளின்றி 'ஈழவர்' என்றே அழைக்கப்பட வேண்டியவர்களென்பதையும் தெளிவாக்கியது.

இந்த நிறுவனமானது ஒடுக்குமுறை புரியும் ஸ்ரீலங்கா அரசுக்கெதிராக தமிழ் பேசும் மக்களை,

**நாம் ஈழவர்**

**நமது மொழி தமிழ்**

**நம் நாடு ஈழம்**



என்ற கோஷத்தின் கீழ் ஒருங்கிணைத்து வருகின்றது. தொழிலாள வர்க்கத்தின் உரிமைகளைப் பாதுகாக்கவும் சகல தரப்பினர்க்கும் சமூக நீதி கிடைக்கவுமே, "ஈழம்" உருவாக்கப்பட வேண்டுமென்பதுவே ஈரோஸ்-இன் உறுதியான கொள்கையாகும். மலைநாட்டில் வாழ்கின்ற தமிழ் பேசும்மக்கள் அவர்கள் தமிழ் மொழியைப் பேசுகின்ற ஒரே காரணத்தால் தாங்க முடியாத ஒடுக்குமுறையை அனுபவித்து வருவதுடன் எந்த மண்ணில் அவர்கள் இரத்தத்தை வியர்வையாக்கி நூற்றுக்கணக்கான வருடங்களாக உழைத்தார்களோ அந்த மண்ணிலிருந்து அவர்கள் விரட்டியடிக்கப் படுவதுடன் பொறுக்க முடியாத பொருளாதாரக் கஷ்டங்களையும் அனுபவித்து வருகின்றார்கள். இவர்கள் வாழ்கின்ற மலைநாட்டுப் பகுதியையும் உள்ளடக்கிய பகுதியே 'ஈழம்' என அழைக்கப்படுகிறது.

ஈழப்புரட்சி என்பது சர்வதேச தொழிலாள வர்க்கத்தினரின் உரிமைப் போராட்டத்தில் பிரிக்கமுடியாத ஒரு பாகமெனவே ஈழப்புரட்சி அமைப்பு கருதுகின்றது. சர்வதேச முற்போக்கு சக்திகளுடனும் விடுதலைக்காகப் போராடும ஒடுக்கப்பட்ட மக்களுடனும் தம்மை அடையாளம் காட்டிக்கொள்ள ஈரோஸ் ஒருபோதும் தயங்கியதில்லை.

இந்து மகாசமுத்திரத்தில் தம்மை நிலைநிறுத்துவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்ற அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அதன் அடிவருடிகளுக்கும் ஈழவிடுதலைப் போராட்டமொருவலுவான சவாலாகும். சர்வதேச பாட்டாளி வர்க்கத்தினரின் வெற்றியிலேயே உலக சமாதானமானது நிலைநிறுத்தப்படலாமென்று ஈழப்புரட்சி அமைப்பு நம்புகின்றது.

இந்தக் கொள்கைகளை நிலைநாட்டவே 1975-11-23 ந் தேதி ஈழப்புரட்சி அமைப்பு இலண்டனில் உதயமானது. ஈரோஸ்இன் கொள்கைகளுக்கு இருந்த அளவற்ற ஆதரவினால், சர்வதேச விடுதலை இயக்கங்களின் ஆக்கபூர்வமான உதவிகளைப் பெற முடிந்தது. வெளிநாடுகளில் இராணுவப் பயிற்சி பெற்ற தோழர்கள் தமது கொள்கைகளை சமூக பொருளாதாரத் திட்டங்களினால் அமுலாக்கலாமென்று நம்பினார்கள்.

1977- ம் ஆண்டு ஆவணி மாதம் நடைபெற்ற கலவரங்களினால் மலைநாட்டிலிருந்து வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு துரத்தப்பட்ட மக்களை மறுவாழ்வளிப்பதற்கு கூட்டுறவு மாதிரிப் பண்ணைகள் அமைக்கப்பட்டன.

அந்த வேளையில் இந்த மாதிரிப் பண்ணைகளில் ஒன்றாக விளங்கிய கன்னாட்டிப் பண்ணையைப் பற்றிப் பிரத்தியேகமாக குறிப்பிடலாம். மற்றைய மறுவாழ்வு திட்டப் பண்ணைகளில் நாட்கூலி கொடுக்கப்பட்டது போலல்லாமல், இந்த மாதிரிப் பண்ணை கூட்டுறவு முயற்சியினடிப்படையில் நடாத்தப்பட்டது இப்பண்ணைத் தொழிலாளிகளுக்கு உதவும்முகமாக அங்கு ஒரு கூட்டுறவுக் கடையும் குழந்தைகள் பராமரிப்பு நிலையமும் உருவாக்கப்பட்டது. சிறித



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளவு பணம் ஊக்குவிப்புப்பணமாகக் கொடுக்கப்பட்டது. ஒரு கூட்டுறவுப் பண்ணை அங்கே பரீட்சார்த்தமாக நடத்தப்பட்டது. 1978-1979ம் ஆண்டுகளில் இப்பண்ணை இராணுவத்தினரால் தாக்கப்பட்டபோதும் அங்கிருந்த மக்கள் தொடர்ந்து வாழக் கூடியதான சூழ்நிலை உருவாக்கப்பட்டது. 1978 ம் ஆண்டு கிழக்குமாகாணம் சூறாவளியால் பாதிக்கப் பட்டபோதும் இதேபோன்று பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்க தொண்டர் படையின் உதவி வழங்கப்பட்டது இவ்வாறான சமுக பொருளாதாரத் திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்ட தொண்டர்களினதும் முன்னோடிகளினதும் மூலமாக மக்களை அரசியல் மயப்படுத்துவதென்பது ஈரோஸின் ஒரு கொள்கையாகும். இந்தவடிவில் இயங்கிக் கொண்டிருந்த ஈரோஸின் முன்னணித் தோழர்கள் 1980 ஆம் ஆண்டு ஒரு கசப்பான அனுபவத்திற்குஆளாகினார்கள்.

ஈரோஸின் மாணவர் அமைப்பான ஈழமாணவர் பொது மன்றம் ஈழப்புரட்சி அமைப்பின் தலைமைத்துவத்தைப் புறக்கணித்து EPRLF என்ற வேறான தலைமையை உருவாக்கியது.

தலைமைத்துவத்திற்குள்ளான போட்டியும் நடைமுறைப்பிரச்சனைகளும், அடிப்படைக் கொள்கைகளிலேற்பட்ட கருத்து முரண்பாடுகளுமே முன்னணித் தோழர்களிடையே பிரிவினை ஏற்பட பிரதான காரணங்களாக அமைந்தன.

ஈரோஸினுடைய நடைமுறைச் செயற்பாடுகளுக்கு இந்தப்பிரிவு ஒரு பின்தள்ளும் காரணியாக இருந்த போதிலும் ஸ்தாபனத்தின் முற்போக்கு நடவடிக்கைகளுக்கு இது பாதகத்தை விளைவிக்கவில்லை.

ஈழ ஆய்வு நிறுவனம், ஈழப்புரட்சி அமைப்பு, ஈழம் குடிபெயர்ந்தோர் அமைப்புச் சங்கம், பொருளாதார மறுவாழ்வுச் சங்கம் ஆகியவற்றைத் தனது செயற்பாடு ஊடகங்களாக ஈரோஸ் கொண்டுள்ளது. ஈழ ஆய்வு நிறுவனமானது அரசியல் ஆய்விலும், ஆய்வு வெளியீடுகளிலும் ஈடுபட்டிருக்கும் கல்விமான்களைக் கொண்டுள்ளது. லங்கா ராணி, இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைததனம், ஈழவர் இடர்தீர, ஜெயவர்த்தன அரசுக்கெதிரான ஒரு வழக்கு ஆகியன வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிறுவனமூடாகத் தொடர்ச்சியான பல கருத்தரங்குகள் நாடத்தப்பட்டுள்ளன. ஈழக் கோரிக்கையின் முக்கியத்துவத்தைத் சர்வதேச ரீதியில் பிரச்சாரம் செய்வதற்காக இலண்டனிலுள்ள இக்குழு EROS என்ற சஞ்சிகையை வெளியிட்டுவருகின்றது ஈழப்புரட்சி அமைப்பானது மக்களை அரசியல் மயப்படுத்துவதிலும் அவர்களை ஆயுதப்போராட்டத்திற்காகத் தயார் செய்வதிலும் தனது கவனத்தைச் செலுத்தி வருகின்றது.

ஆயுதப் போராட்டத்திற்கு மக்களை அரசியல மயப்படுத்த வேண்டி ''தர்க்கீகம்'' என்ற தமிழ்ப் பத்திரிகையை 1980ம் ஆண்டிலிருந்து வெளியிட்டு வந்துள்ளது. அதே வேளையில் ''பொதுமை'' என்ற தமிழ்ப் பத்திரிகையையும் 1982ம் ஆண்டு தொடக்கம்வெளியிட்டு வருகின்றது.

ஈழத்திலும் வெளி நாடுகளிலும் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு தமது கருத்துக்களைப் பரப்புவதற்காக ''ஈழம'' என்ற மாதாந்தர சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றது.

அரசியல் ரீதியாக வளர்ச்சியடைந்த தோழர்களை இராணுவப் பயிற்சிக் குட்படுத்தி வரும் ஈழப்புரட்சி அமைப்பானது, தகுந்த தந்திரோபாயங்களை அறிமுகப் படுத்தி வருகிறது.

ஈழப்புரட்சி அமைப்பானது பொருளாதார இலக்குகள் மீது தாக்கி சோவனிச அரசை ஆட்டங்காண வைப்பதனூடாகவே, ஈழப்பகுதியிலுள்ள கூலிப்படைகளை விரட்ட முடியுமென நம்புகிறது.

மற்றைய தாக்குதல்கள் கீழ்க்கண்ட நோக்கங்களுடன் நடாத்தப்பட்டுள்ளன. ஈழத்தின் எல்லைகளுக்குள் செறிவுப்

கொள்வதற்கும், அரசாங்கத்தை நிலைகுலையச் செய்வதற்குமாகும்.

இவ்வாறான இராணுவத் தந்திரோபாயங்களை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தும் அதேவேளையில் தமிழ்பேசும் மக்களை ஒரு மக்கள் போராட்டத்திற்கு தயார்ப்படுத்துவதிலும் ஈடுபட்டு வருகின்றது. இவ்வாறான நடவடிக்கைகளினால் ஈழப்புரட்சி அமைப்பு ஒரு மக்கள் எழுச்சிக்கு ஈழவர்களை ஆயத்தப்படுத்துகின்றது.

ஈரோஸ் இன் கொள்கைகளையும் தத்துவங்களையும் ஏற்றுக்கொண்டு- அதன் தலைமையின்கீழ் இயங்கிவருமொரு மாணவர் அமைப்பே General Union of Youth and Students ஆகும். புரட்சிகர மாணவ அமைப்பொன்றை உருவாக்கி- மாணவர்களை அதன் உறுப்பினராக்குவது அதன் திட்டமாகும்.

ஈரோஸ் இன் மாணவர் அமைப்பான மாணவர் இளைஞர் பொது மன்றம் ஈழ மாணவரிடையே கருத்துக்களைப் பரப்புவதிலீடுபட்டுள்ளது. இந்த மாணவர் இளைஞர் பொதுமன்றத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நம் முன்னணியில் திகழ்கின்றது. போராட்டத்தில் காணப்படுகின்ற நடைமுறைப் பிரச்சனைகள் பற்றிய தெளிவை இளைஞர்கள் மத்தியிலும் மாணவர் மத்தியிலும் ஏற்படுத்திவருகின்றது.

இதே வேளையில் ஈழத்தின் மாணவர்களும் இளைஞர்களும் அவர்கள் எந்த வனத்தில் வாழ்ந்தாலும் ஈழம் பற்றிய பூரண தெளிவு கொண்டவர்களாக உருவாக்கப்படவேண்டுமென்பதில் மாணவர் இளைஞர் பொதுமன்றம் தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றது.

எதிர்காலத்தில் ஈழப் புரட்சி அமைப்பில் இணைவதற்கேற்ப இந்த மாணவர்களும் இளைஞர்களும் சிந்தனைரீதியாக முதிர்ச்சிபெற்றவர்களாக வளர வேண்டுமென்பதில் அதிக அக்கறை செலுத்தப்படுகிறது.

ஈழம் குடிபெயர்ந்தோர் அமைபபுச்சங்கமானது சிறீமா, சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இடம் பெயர்க்கப்பட்ட மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் தன் பணியைச் செய்து வருகின்றது. அத்தோடு இது ஈழ பொருளாதார திட்டங்களையும் உருவாக்குவதில் அக்கறை செலுத்துறது.

ஈழவரின் ஏகோபிதத ஆதரவைப் பெற்றுவரும் இவ்வமைப்புக்களின் ஒருங்கிணைந்த சக்தியான EROS ஒரு முதன்மையான சக்தியாக உருவெடுத்து வருகிறது.

**நாம் ஈழவர்**
**நமதுமொழி தமிழ்**
**நம்நாடு ஈழம்**

---

**The EROS consists of various functional organisations, such as the Eelam Research Organisation, the Eelam Revolutionary Organisation, the Eelam Repatriate Organisation and Economic Rehabiliation Organisation.**

---

**அட்டைப்பட விளக்கம்**

# குட்டான்

**மெலிதான யன்னலூடாக இடையிடையே வீங்கிப்போனதலையோடு ஒருமுகம் தெருவை நோக்குகின்றது. ஈழத்து நவநாகரீக அகதிகள் Just for a walk போகின்ருர்கள்.**

**ஒரு அகதி தனது வாயைத் திறக்க...**

என்னடி...இதென்ன... Colombo வெயிலப்பா... இலை எண்டா... சீ... இதையும் ஒரு City எண்டு நம்பி வந்தமே... இருவர் தலையாட்டி ஆமோதிக்க ஒரு அகதி மட்டும் நீர் ஏதோ tourist ஆகவே இங்கை வந்தனீர்...அடிச்சுக்கலைச்சுவிட ஓடிவந்திட்டு... நான் tourist தானேயப்பா... I having tourist visa...having foreign Exchange... நாங்களும்மண்டபத்தில்இருக்கிற ஆட்களும் ஒன்டேயப்பா...

கூட்டம் கடக்கிறது... அறைக்குள்ளிருந்த 'வீங்கியதலை' நாடியில் கைவைத்தபடி சிந்திக்கத் தொடங்குகின்றது. யாரோ புதியவர் அறைக்குள் நுழைகிருர்.

டேய்... குட்டான்... எழும்படா... Party-க்கு வாறனெண்டிட்டு என்ன பண்ணிக் கொண்டிருக்கிருய்.

வா... வா... வெளிக்கிடு. குட்டான் மௌனமாகத் தலைவாரிக்கொண்டு புறப்படுகின்ருர்.

மீண்டும்... ஒரு அறை... படிப்பதற்கு உபயோகப்படும் மேசை விளக்கொன்று ஒளி பாய்ச்சிக்கொண்டிருக்கின்றது. அறை நடுவிலே ஒரு மேசை... மேசையில் சில இந்திய தயாரிப்புகளான தாகசாந்தி... சில கொறிக்கும் பண்டங்கள்... சில அசைவத் தயாரிப்புகள்... இழுக்க இழுக்க இறுதி வரை இன்பம் தரும் (!) வெளிநாட்டுத் தயாரிப்பு ஊதல்கள்...

சிறிது நேரத்தில் glassகள் மோத உற்சாக (!) கோஷத்துடன் மாணவ **சிகாமணிகள் படிப்பைத் தொடருகின்றனர்.** சிறிது நேரத்தில் ஏதேதோ பேசவும் தலைப்படுகின்றனர். (?)

கோகுல்:- மச்சான் ரமேஷ் B & vv அடிச்சிருக்கிறியே..... அது ஒரு சாமான் தான்....அதுவும் 5 5 5 ம் இருக்கவேணும்... போயும் போயும் இந்தியாவுக்கு வந்தம்.... இதுகளும் ஒரு சாமானே? மிளகுத் தண்ணி மாதிரி.....

---

**குட்டானின் பக்கங்கள்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரமேஷ்:- போடா... அதைவிட Napoleon மணியடா. நீ ஒரு நாளும் அடிக்கேல்லையே? பொறன்றாப்பா இந்த Degreeச் சனியன் முடியட்டன்.... லண்டனுக்குப் போய்ப் பிடிக்கிறேன் ஒரு பிடி...

(பொறுக்க மாட்டாமல்

குட்டான்: வெளிநாட்டுக்குப் போய்த் தண்ணியடிச்சுக் கொண்டிருக்கிறதெண்டா அதுக்கேன் படிப்பு...இப்பவே போகலாமே? கூலி உழைப்புக் குத்தானே வெளிநாட்டானும் ஆள் தேடுகிறன். ஒரு மாணவன் தன்ரை படிப்பைப்பயன்படுத்தி சமூகத்தை எவ்வளவு தூரம் முன்னேற்ற முயற்சிக்கின்றானோ அப்ப தான் அவன் உண்மையான பட்டதாரியாகிறான் ஏதோ பெரிய தாய்ப்பாசம் எண்டு கிழமைக்கொரு கடிதம் அம்மாமாருக்கு எழுதிறியள்... பிறந்த பொன்னாட்டைப்பற்றியும் கொஞ்சமாவது?...

கோகுல்:-பெரிய பொன்னாடு... எங்கையடா நாடிருக்கு? அவன் அடிச்சு ஆயிரம் பேரைக் கொண்டவுடனே நீங்க சுடுவியள்...சுடுகிற விளையாட்டு ஆமிக்காரனுக்கு மட்டுமில்லை ... தங்களுக்குள்ளேயும் இடைக்கிடை...மொத்தமா என்னகுட்டான்...ராசா ...உங்களிலை 32 இயக்கமிருக்குமே...அல்லது இன்னும் கூடவோ?

குட்டான்:-அப்ப எல்லாரும் சேர்ந்த ஒரு ஒருங்கிணைத்த சக்தி மட்டுமே போராட்டத்தை முன்னெடுக்குமெண்டா. நீங்களும் உங்கடை சுயநலப் போக்கை மறந்து போராட்டத்திலை பங்கெடுப்பியளோ? சும்மா...சாட்டுச் சொலலாதையும். நீர் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. கொஞ்சம் விஞ்ஞானக் கண்ணோட்டத்திலை எங்கடை சமூகத்தைப் பாருமன்... ஏன் உம்மையே எடுத்துப் பாருமன். இப்ப உமக்கொரு வசதி வாய்ப்பு இருக்குது. அதாலை தப்பிக்கப் பார்க்கிறீர். இப்ப உமக்கொரு விரக்தி வந்து இயக்கத்துக்குப் போறீர். கொஞ்ச நாளைக்கு ஏதோ ஆயுதமெண்டு நம்பியிருப்பீர்...பிறகும் விஷயங்களை விஞ்ஞான பூர்வமாக எதிர்காலக் கண்ணோட்டத்தோடை பார்க்கமாட்டீர். மக்களை நம்பமாட்டீர். தவிர்க்கோலமல் ஒருசுயநலம் நிறைந்த எதேச்சாதிகாரப் போக்கு தலையெடுக்கும். அல்லது குழம்பு குழம்பெண்டு குழம்பி புது இயக்கம் துவங்குவீர். உண்மையாக கருத்துரீதியாக விஞ்ஞானபூர்வமான சிந்தனை நிறைந்த முற்போக்காளராலேதான் ஈழம் நிதர்சனமாகும். மற்றதெல்லாம் கொஞ்சம் நாளைக்குத்தான்...

குட்டானுக்கு பல் துடிக்கிறது கால்கள் நிலத்தை பிறாண்டுகின்றன. கை சுவரைக் குத்துகின்றது.

(சின்னவயதிலிருந்தே குட்டான் தான் சொல்ல வந்ததைச்சொல்ல முடியாமல் போனால் இப்படித்தான் ஏதாவது செய்வார்.)

-தொடரும்



# எங்கே போகிறாய்?...

தம்பி நில்லடா!
குகனண்ணா
கொழும்பிலே உத்தியோகம்
சாந்தனண்ணா
சவுதியிலே உத்தியோகம்
சின்ன மாமா
மேற்கு ஜெர்மனியில்
எங்கள் அக்கா
இந்தியாவில்.
தம்பி நில்லடா!
நீ எங்கை போறாய்?
நேற்று
நெல்லியடிச் சந்தியிலே
நித்தியானந்தத்தார்
சுட்டுக் கிடந்தார்
உனக்குத் தெரியுமே?
என் தோழி
இன்பராணி
என்ன ஆனாள் என்று தெரிய
வில்லை!
உனது தோழன்
உதய சிங்கன்
உயிரை விட்டான்
உடுப்பிட்டியிலே.
தம்பி நில்லடா!
எங்கை போறாய்?
சந்தைக்குச் சென்று
வருகையிலே
சவத்தை நான் பார்த்தே
னென்று
தங்கமான ஈழத்தைவிட்டு
தப்பியோடவா பார்க்கிறாய்?
தம்பி நில்லடா!
நானும் வாறன்.
நானும் நீயும்
நம் மக்கள் பட்ட துன்பம்
இன்றோடு நின்றுவிட
நாளைக்கு நல்லவிடிவு
நாமிருவரும் தேடிக்கொடுத்திட
நம் முழைப்பைக் கொடுத்து
நல் லீழம் அமைத்திட
நானும் நீயும்
சென்றிடலாம்,
சென்றிடலாம்.
நில்லடா தம்பி!
அந்தா பார்!
பொழுது விடிஞ்சிட்டுது.
வா கெதியாய்
விரைந்திடுவோம்.

எமது அபிமானத்தைப் பெற்ற குட்டான் தலைதெறிக்க ஓடுவதேனோ?......(அடுத்த இதழில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழமண்ணில் போராடி வாழும் மாணவர் இளைஞர் பொது மன்றத் தோழர்களால் 15—05—1985இல் வெளியிடப்பட்ட "நாங்கள்"-இதழ் 4' வெளிநாடுகளிலுள்ள தோழர்களுக்காக மறுபதிப்பு செய்யப்பட்டு 01—08—85இல் வெளியிடப்படுகிறது.

**நாங்கள் - 4.**

அன்பளிப்பு: ரூபா: 2/-

தொடர்பு:
த. பெ. எண்: 2856
சென்னை-600024.




உள்ளே தொடர் கட்டுரை.....பக்கம்-6

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்